திரு. கே. எஸ். கணபதி : தலைவர் அவர்களே, சில தனியார் கல்லூரிகளில், ஐந்து ஆண்டு காலமாகியும், அரசாங்கம் அனுமதி கொடுக்கவில்லை என்று காரணம் சொல்லி, வேலை நீக்கம் செய்திருக்கிறார்கள். தனியார் கல்லூரி களில் இந்த நிலைமை ஏற்பட்ட இடங்களில் மீண்டும் அவர்களை வேலைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்று அரசு உத்தரவு பிறப்பிக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இதுபற்றி விவரக் குறிப்பு இல்லை. தனிக் கேள்வி போட்டால், ஆராயலாம்.

திரு. கே. எஸ். கணபதி : தலைவர் அவர்களே, எந்தெந்தக் கல்லூரிகளில் அவ்வாறு செய்யப்பட்டிருக்கிறது என்று அரசுக்கு பல்கலைக்கழகம் மூலம் விவரங்கள் வந்திருக்கும் என்று நம்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, விவரக் குறிப்பு என்னிடம் இல்லை. மீண்டும் தரப்பட்டால் ஆராயலாம்.

Non-teaching Staff.

* 34. *Q.*—THIRU K. S. GANAPATHI (on behalf of THIRU M. RAJAH IYER) : Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether the non-teaching staff in aided High Schools have to attend schools during the school holidays and the summer vacation;

(*b*) if so, the details thereof; and

(*c*) the leave privileges for which they are eligible?

ஆசிரியரல்லாத பிற பணியாளர்கள்

திரு. கே. எஸ். கணபதி (திரு. எம். ராஜா அய்யர் சார்பில்) : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) மானியம் பெறும் உயர்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரிய ரல்லாத பிற பணியாளர்கள் பள்ளி விடுமுறை நாட்களிலும், கோடை விடுமுறையிலும் பள்ளிக்குச் செல்ல வேண்டுமா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

(உ) அவர்கள் பெறத் தகுதியுள்ள விடுப்பு உரிமைகள் யாவை?

1974 சனவரி 23]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) உதவி பெறும் பள்ளிகளிலுள்ள ஆசிரியர் அல்லாத அலுவலர்கள் ஏதேனும் அலுவல் காரணங்களைக்கொண்டு கோடை விடுமுறையைப் பயன்படுத்தக்கூடாது என ஆணையிடப்பட்டாலன்றி சாதாரணமாக அவர்கள் கோடை விடுமுறையைப் பயன்படுத்திக்கொள்ளலாம்.

(உ) பணத்திற்காக விடுப்பு ஒப்புவிப்பு வசதி உள்பட அரசு அலுவலர்களுக்கு இருக்கும் எல்லா விடுப்பு வசதிகளும் உதவி பெறும் பள்ளிகளிலுள்ள எல்லா ஆசிரியரல்லாத அலுவலர்களுக்கும் இருக்கின்றன.

திரு. கே. எஸ். கணபதி : தலைவர் அவர்களே, சர்க்கார் சிப்பந்திகளுக்கு உள்ளது போல் இவர்களுக்கும் அளிக்கப்படலாம் என்று அரசு ஒரு ஆணை பிறப்பிக்குமா என்ற அறிய விரும்புகிறேன். அப்படித் தெளிவாகப் போட்டால்தான் நலம் என்று கருதுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அது பற்றி விவரக் குறிப்பு என்னிடம் இல்லை. தனிக் கேள்வி போட்டால், விவரம் தரப்படும்.

திரு. க. அறிவழகன் : தலைவரவர்களே, மான்யம் பெறுகின்ற பள்ளிகளில் பணி புரியும் கடைநிலை ஊழியர்கள் கோடை விடுமுறைகளில் பள்ளிக்கு வர வேண்டும் என்று கூறப்படுகிறது. அது மட்டுமல்லாமல், அந்தக் கடைநிலை ஊழியர்களுக்கு இன்னும் மாதம் 15 ரூபாய்தான் சம்பளம் வழங்கப்படுகிறது. நம்முடைய அரசின் பொதுப் பணித் துறை மற்ற துறைகளில் உள்ள கடைநிலை ஊழியர்களுக்கு நிரந்தர வசதி செய்து தரப்பட்டுள்ளதுபோல், அரசாங்கப் பள்ளிகளில் பணிபுரியும் கடைநிலை ஊழியர்களுக்கு உள்ளது போல், தனியார் பள்ளி கடைநிலை ஊழியர்களுக்கும் எல்லாச் சலுகைகளும், சம்பளமும் வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இப்பொழுது அதைப் பற்றிச் செயற்குறிப்பு ஏதும் இல்லை. தனியாக ஆராயலாம்.

தவத்திரு. குன்றக்குடி அடிகளார் : தலைவர் அவர்களே, மான்யப் பெறுகின்ற பள்ளிகளில் உள்ளவர்கள் கோடை விடுமுறையைப் பயன்படுத்திக் கொண்டு பணிக்கு வராமலிருந்தால், சிக்கல்கள் ஏற்படும் என்று கருதுகிறேன்.

தேர்வு முடிவுகள் அறிவிக்கப்படுவது போன்றவை நடைபெற வேண்டிய நேரம் அது. கோடை விடுமுறை கொடுக்காமல் அரசு ஊழியர்களுக்குக் கொடுப்பது போல் கொடுக்கலாம் என்று கருதுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அரசு ஊழியர்களுக்குள்ள மற்ற, மற்ற விடுமுறைகள் அவர்களுக்கும் உண்டு என்று குறிப்பு இருக்கிறது.

" As regards the school holidays, it is stated that the non-teaching staff in aided secondary schools should follow the list of holidays for the staff of Government offices, fixed by the Government every year."

அந்த ஊழியர்களுக்குக் கொடுப்பது போல் இவர்களுக்கும் கொடுக்கலாம் என்ற அடிப்படையில் இருக்கிறது.

" They are to adhere to the working hours fixed for the Government offices, and even they are expected to attend office on school holidays and sign the attendance register. School holidays will be treated as vacation if they exceed 15 days in duration ".

என்ற முறையில் ஆசிரியர்கள் அல்லாதவர்களின் பணிகள் போடப் பட்டுள்ளன.

திரு. க. அறிவழகன் : தலைவரவர்களே, விடுமுறை பற்றி மற்ற அரசுத் துறை ஊழியர்களுக்கு உள்ளது போல் இவர்களுக்கும் உண்டு என்று அரசு அறிவிப்பு திட்டவட்டமாக வரவேண்டும். கோடை விடுமுறையைச் சரிவர அளிக்காத நிலையும், மற்ற விடுமுறைகளைக் கொடுக்காத நிலையும் பல பள்ளி களில் இப்பொழுதும் இருந்து வருகிறது.

MR. CHAIRMAN : Supplementaries must always be short.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இப்பொழுது இருக்கின்ற நிலைமையில் எப்படி நடைபெற்று வருகிறது என்று புரியவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியது கவனத்தில் கொள்ளப்படும்.